**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

## *இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை*
## *பாடம் 3*

## கிறிஸ்துவின் வருகையின் நிச்சயத்தின் முக்கியத்துவம் என்ன?

## Importance of Imminent Coming

*இயேசு தம்முடைய சீஷர்களை யார் கூறுவதையும் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள் (மோசம்போகாதீர்கள்) என்று கூறினார்!*

*ஆனால் தெசலோனிக்கே சபையின் காரியத்தை நாம் இப்போது பார்க்கலாம்!*

*இத சபை பல வகையில் தனித்தன்மை வாய்ந்த சபை. அவர்கள் அதிகமாக படித்ததில்லை, அதோடு அதிகமாக துர்குணங்கள் இல்லாத சபை. ஆனால் அவர்கள் மற்றவர்களால் சுலபமாக ஏமாற்றப்படுபவர்கள் அல்லது மோசம்போக்கப்படுபவர்கள்.*

*2 **தெசலோனிக்கேயர்** 2:1-2, அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், 2. ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.*

*அந்த சபையிடம் கிறிஸ்து ஏற்கனவே வந்துவிட்டார் என்று சிலர் பொய்யாக அறிவித்துவிட்டனர். அவர்களும் அதை நம்பிவிட்டார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினதுபோல ஒரு போலியான கடிதத்தையும் எழுதி, கிறிஸ்து ஏற்கனவே வந்துவிட்டார் என்று அவர்களை நம்பவைத்துவிட்டனர்.*

*இயேசு கிறிஸ்து ஏற்கனவே வந்துவிட்டார் என்கிற பொய்யான செய்தியை நம்பி, தெசலோனிக்கேய சபையின் ஜனங்கள் மரித்துப்போன தங்களுக்கு பிரியமானவர்களை எண்ணி துக்கத்தில் இருந்தனர்.*

*ஆகவே தான் பவுல் அவர்களை துக்கப்பட வேண்டாம் என்றும், தான் அவர்களோடு இருந்தபோது கூறியவைகளை நினைவில் வைத்துக்கொள்ளவும் அறிவுறுத்துகிறார்.*

*2 **தெசலோனிக்கேயர்** 2:5, நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா?*

*பவுல் இந்த கடிதத்தின் மூலம் அவர்களை தேற்றி, ஒருவருக்கொருவர் சத்தியத்திலே ஆறுதல் சொல்லி தேற்றுங்கள் என்று கூறுகிறார்.*

*1 **தெசலோனிக்கேயர்** 4:13-14, அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. 14. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்.*

*அதோடு சிலர் ஆண்டவர் வந்துவிட்டார் என்று கேள்விப்பட்டு, வேலைக்கு சென்று சம்பாதிப்பதை நிறுத்திவிட்டார்கள். வேலை ஏதும் செய்யாமல் சும்மா இருக்க ஆரம்பித்துவிட்டார்கள். நாளடைவில் இவர்கள் சபைக்கு பாரமாகிவிட்டார்கள். ஏனெனில், சபை இவர்களை போஷிக்க வேண்டியிருந்தத்து, அது மட்டுமல்லாமல் இவர்களுடைய குணங்களும் நாளடைவில் சபையில் ஒழுக்கக்கேட்டை கொண்டுவர ஆரம்பித்தது.*

*2* **தெசலோனிக்கேயர்** *3:10-12,* ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. *11.* உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். *12.* இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்.

ஆண்டவர் நிச்சயம் வருவார் என்று பவுல் அவர்களுக்கு உறுதி கூறிவிட்டு, ஆனால் அதற்கான நேரம் இன்னும் அமையவில்லை என்றும் அவர்களுக்கு எழுதுகிறார். இதை வலியுறுத்தவே ஒவ்வொரு அதிகாரத்தின் இறுதியிலும் ஆண்டவரின் இரண்டாம் வருகையை குறித்து ஒரு வசனத்தை எழுதுகிறார்.

*1* **தெசலோனிக்கேயர்** *1:10,* அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள்

*எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.*

*1* ***தெசலோனிக்கேயர்*** *2:19-20 19. எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்; 20. நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்.*

*1* ***தெசலோனிக்கேயர்*** *3:13, இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.*

*1* ***தெசலோனிக்கேயர்*** *4:17-18, பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் .18. ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.*

*__1 தெசலோனிக்கேயர் 5:23,__ சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*

*என்ன ஒரு ஆனந்தம்!!*

*சரி, இப்போது இவர்கள் எப்படி இப்படிப்பட்ட ஒரு பிரச்சனையில் சிக்கிக்கொண்டார்கள் என்று பார்ப்போம்.*

*__மத்தேயு 23:36,__ இவைகளெல்லாம் இந்தச் சந்ததியார்மேல் வருமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*இந்த வசனத்தில் மொழிபெயர்கபட்டுள்ள சந்ததி என்கிற வார்த்தை நாம் இப்போது பேசுகிறது போல அர்த்தம் கொள்ளாது. இதை புரிந்துகொள்ள மத்தேயு 23-ஆம் அதிகாரத்தை அந்த அதிகாரத்தின் சூழலை பார்த்து தெளிவாக புரிந்துகொள்வோம்.*

*இயேசு கிறிஸ்து வேதபாரகரையும் பரிசேயரையும் பார்த்து, நீங்கள் வேதத்தை மற்றவர்களுக்கு போதிக்கிறீர்கள் ஆனால் அதை பின்பற்ற மறுக்கிறீர்கள் என்று கடிந்துகொள்கிறார் இந்த . வசனங்களை ஆங்கிலத்தில் Message translationல்- இப்படியாக மொழிபெயர்த்திருக்கிறார்கள்*

*மத்தேயு 23:* 3-7,

*They talk a good line, but they don't live it. They don't take it into their hearts and live it out in their behavior. It's all spit-and-polish veneer.* ***4-7*** *"Instead of giving you God's Law as food and drink by which you can banquet on God, they package it in bundles of rules, loading you down like pack animals. They seem to take pleasure in watching you stagger under these loads, and wouldn't think of lifting a finger to help. Their lives are perpetual fashion shows, embroidered prayer shawls one day and flowery prayers the next. They love to sit at the head table at church dinners, basking in the most prominent positions, preening in the radiance of public flattery, receiving honorary degrees, and getting called 'Doctor' and 'Reverend.'*

*ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். 4. சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். 5. தங்கள் கிரியைகளெல்லாம் மனுஷர்*

*காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி, 6. விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், 7. சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்.*

### ஏழு ஐயோ

**List of seven woe's**

1. *மற்றவர்கள் இரட்சிக்கப்பட தடையாக இருப்பதற்கு*
   *For making salvation hard for other people (v. 13)*
2. *ஒருவனை தங்கள் மார்க்கத்தில் சேர்த்து கெடுத்துப்போடுவதற்காக*
   *For corrupting converts (v. 15)*
3. *முரட்டுத்தனமான (மூர்க்கமான) மார்க்கத்தை திணிப்பதற்காக*
   *For rude religion (vv. 16-22)*
4. *உண்மையில் முக்கியமானதை விட்டு விலகுவதற்காக*
   *For neglecting what is actually important (vv. 23-24)*
5. *தங்களைதாங்களே வழிபடுவதற்காக*
   *For self-indulgence (vv. 25-26)*

6. *தங்களுக்குள் இருக்கும் துன்மார்க்கத்திற்காக*
   *For wickedness within (vv. 27-28)*
7. *தேவனுடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்வதற்காக*

   *For the murder of God's prophets (vv, 29-36)*

*இறுதியில் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போனது மாத்திரமல்ல தேனுடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்யவும் ஆரம்பித்தார்கள்.*

*இந்த கூட்டத்தாரைத்தான் இயேசு சந்ததி என்று கூறுகிறார்!*

## இயேசு ஏன் திரும்ப வேண்டும்?

## Why Jesus must return?

*பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் 46 பேர்களில் பத்து பேருக்கும் குறைவானோர் கிறிஸ்துவின் முதலாம் வருகையை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தனர் ஆனால் .36 தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறித்து தொடர்புடைய காரியங்களை தீர்க்கததரிசனமாக உரைத்திருக்கிறார்கள்.*

## *1.* தேவனுடைய வார்த்தை
## Word of God

*பழைய ஏற்பாட்டில் மாத்திரம் 1,527 வசனங்கள் ஆண்டவரின் இரண்டாம் வருகையை குறித்து எழுதப்பட்டுள்ளன.*

*புதிய ஏற்பாட்டில் மொத்தம் உள்ள வசனங்கள் 7,959 அவற்றில் 330 வசனங்கள் அவரின் இரண்டாம் வருகையை குறித்து எழுதப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டில் கிட்டத்தட்ட இருபத்தைந்து வசனங்களுக்கு ஒரு வசனம் (1 in every 25 verse) ஆண்டவரின் இரண்டாம் வருகையை குறித்து எழுதப்பட்டிருக்கிறது.*

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே அவருடைய இரண்டாம் வருகையை குறித்து 21 முறை கூறியிருக்கிறார்.*

*இயேசு கிறிஸ்து தம்முடைய முதலாம் வருகையை குறித்த தீர்க்கதரிசனங்களை எழுத்து மாறாமல் அப்படியே ஒவ்வொன்றையும் நிறைவேற்றினார். ஆகவே அதேபோல், அவருடைய இரண்டாம் வருகையை குறித்த அனைத்து தீர்க்கதரிசனங்களையும் ஒரு புள்ளிகூட பாராமல் அப்படியே நிறைவேற்றுவார். அல்லேலுயா!*

*அவர் ஏன் திரும்ப வருவது நிச்சயம் என்பதற்கு இலகுவான இன்னும் ஒரு காரணம் கூற*

*வேண்டுமானால், "வேதவாக்கியம் நிறைவேற வேண்டும் என்று இயேசு கூறியிருக்கிறார்...". தேவன் பொய்பேசுபவர் அல்ல!!!*

*சில நாட்களுக்கு முன்னதாக நாம் படித்த "இயேசு கிறிஸ்துவின் இறுதி 7 நாட்கள்" என்கிற பாடத்தில், அவர் எப்படி தம்மைக்குறித்த எல்லா தீர்க்கதரிசனங்களையும் வார்த்தை மாறாமல் நிறைவேற்றினார் என்று நாம் பார்த்தோம்.*

*இயேசு கிறிஸ்து நிறைவேற்ற இருக்கிற தீர்க்கதரிசனங்களில் சிலவற்றை நாம் பார்ப்போம்.*

***சங்கீதம் 2:6-9,*** *நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார். 7. தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்; 8. என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்; 9. இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார்.*

*இயேசு வருவார், ராஜாவாக இருப்பார் என்று தேவ வார்த்தை கூறுகிறது. அவர் சிங்காசனத்தில் வீற்றிருந்து, சகல தேசங்களையும் அவருக்கு கீழ்படுத்தி ஆளுகை செய்வார். இரும்பு கோலால்*

*அவர்களை ஆளுகை செய்வார் என்றும் வசனம் கூறுகிறது.*

*இதை இயேசு அவரது முதலாம் வருகையில் நிறைவேற்றினாரா?*

*இல்லை.*

***ஏசாயா 9:6-7,*** *6. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். 7. தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்திலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.*

*மேசியாவாகிய இயேசு தேவனிடத்திலிருந்து வந்திருந்தபோதும், எந்த கர்த்தத்துவமும் அவர் தோளின்மேல் இல்லை. எந்த சமாதானமும் இல்லை, மாறாக சமாதானம் இல்லாமையே இருந்தது. ஆகவே இயேசு தமது முதலாம் வருகையில் இந்த தீர்க்கதரிசனத்தையும்*

*நிறைவேற்றவில்லை. ஆனால் தமது இரண்டாம் வருகையில் இதை நிறைவேற்றுவதாக கூறினார்.*

***மத்தேயு 25:31,*** *அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.*

***எரேமியா 23:5-6,*** 5. *இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். 6. அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது* ***நீதியாயிருக்கிற கர்த்தர்*** *என்பதே.*

*இயேசு ராஜாவாக ஆளுகை செய்தாரா?*

*இல்லை. ஆனால் அவரது இரண்டாம் வருகையில் ராஜாவாக ஆளுகை செய்வார். இஸ்ரவேல் சமாதானமாக எப்போதாவது இருந்ததா?*

*இல்லை, இல்லவே இல்லை.*

***சகரியா 14:4-5,***

> *4. அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற*

ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும். 5. அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள்; மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால்மட்டும் போகும்; நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனதுபோல் ஓடிப்போவீர்கள்; என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.

இது நடந்ததா?

இல்லை.

இயேசு தமது சொந்த வார்த்தையில் கூறுயது:

**யோவான் 14:2-3,** 2. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். 3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான்

*மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.*

*எப்படிப்பட்ட ஒரு வாக்குத்தத்தம்! அவர் நம்மை தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வார்! அவர் என்னை அவரோடு கூட்டி சேர்த்துக்கொள்வார்!!*

***லூக்கா 19:11,** அவர்கள் இவைகளைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் எருசலேமுக்குச் சமீபித்திருந்தபடியினாலும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள் நினைத்தபடியினாலும், அவர் ஒரு உவமையைச் சொன்னார்:*

***மத்தேயு 24:30,** அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.*

***மத்தேயு 25:31,** அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.*

*எனவே, இயேசு இந்த தீர்க்கதரிசனங்களை எல்லாம் கண்டிப்பாக நிறைவேற்றுவார்!! அவர் பொய் சொல்ல மனிதன் அல்லவே அல்ல.*

***லூக்கா 9:22 &26,*** *22. மேலும் மனுஷகுமாரன் பல பாடுகள்படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும், மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார். 26. என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரன் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்.*

*இயேசு இந்த விளக்கத்தை தமது சீஷர்களுக்கு அற்புதமாக விளக்கியிருக்கிறார். தாம் மறித்து, உயிர்த்து மீண்டும் வருவேன் என்று அவர்களுக்கு கற்பித்திருக்கிறார்.*

*வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு ஆறு முறை "இதோ சீக்கிரமாய் வருகிறேன்" என்று கூறியிருக்கிறார்.*

*வேத வல்லுநர் ஒருவர் கூறுகிறார், விடுவிப்பவர் (*deliverer*) வருவார் என்கிற தீர்க்கதரிசனம் சுமார் 333 முறை பழைய ஏற்பாட்டில் உரைக்கப்பட்டுள்ளது. இயேசுவே விடுவிப்பவர். ஆனால் முதல்முறை அவர் வரும்போது இதில் 109 தீர்க்கதரிசனங்களை மட்டுமே அவர் நிறைவேற்றினார். அப்படியானால், விடுவிப்பவர் இன்னும் நிறைவேற்றாத 224 தீர்க்கதரிசனங்கள் உள்ளன.*

## *2. சபை* - Church

*இயேசு தமது சபையை மீண்டும் எடுத்து செல்வதற்கு வருவார்.*

*ஆதி திருச்சபை அதீத வளர்ச்சி அடைந்துகொண்டிருந்தது. வளர்ச்சியோடு பிரச்சனைகளும் கூடவே வந்தன. ஆகவே அப்போஸ்தலர் 15-ஆம் அதிகாரத்தில் எருசலேமில் மூப்பர்கள் கூட்டப்பட்டனர்.*

*பெனிக்கே சமாரியா தேசங்களிலிருந்து பவுலும் பர்னபாவும் வந்திருந்தனர்.*

*தேவன் புறஜாதியார் மத்தியில் என்ன செய்தார் என்பதை (அப் 6 – 12ல் நடந்தவற்றை) அப் 15ல் எருசலேமில் மூப்பர்களுக்கு அறிவிக்கிறார். அப் 10-ஆம் அதிகாரத்தில் பேதுரு கண்ட விசித்திரமான தரிசனமும் கொர்நேலியுவின் வீட்டை அவர் சந்தித்ததும் நமக்கு நினைவில் இருக்கும்.*

***அப்போஸ்தலர் 15:4,*** *அவர்கள் எருசலேமுக்கு வந்து, சபையாராலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவித்தார்கள்.*

*இயேசு கிறிஸ்துவின் ஒன்று-விட்ட சகோதரனாகிய யாக்கோபு பதிலளித்து, தேவன் புறஜாதியாரை*

*சந்தித்ததையும் அவர்களை தம்முடைய ஜனமாக அவர் ஏற்றுக்கொண்டதையும் ஆமோஸ் தீர்க்கதரிசன புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார்.*

***ஆமோஸ் 9:11-12*** *வசனங்கள்* ***அப்போஸ்தலர் 15:16-17ல்*** *மீண்டும் உரைக்கப்பட்டுள்ளது.*

> 16. *எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு,*
>
> *17. நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.*

*இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள காரியங்களை சற்று வரிசைப்படுத்தி பாருங்கள்:*

i. *அப் 15:14 – "தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளினார்" – இது கர்த்தர் சபையை கூட்டுவதை குறிக்கிறது.*

*ii.* *வ17 “நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து” – இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறிக்கிறது.*
*சபை கிறிஸ்துவின் வருகைக்கு முன்னதாக எடுத்துக்கொள்ளப்படும்.*
*இயேசு வரும்போது வ17 “விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன்”.*

*iii.* *இயேசு தமது ராஜ்ஜியத்தி தாவீதின் சிங்காசனத்தில் ஸ்தாபித்து ராஜாவாக ஆளுவார்.*

*iv.* *வ16, “மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு” – சகல தேசத்தாரும் கர்த்தரிடத்தில் வருவார்கள்.*

- *இயேசு தம்முடைய சபையை அழைக்கிறார்*
  Jesus calls out His church,
- *இயேசு கிறிஸ்து திரும்புகிறார்*
  Jesus Christ returns,
- *இயேசு இஸ்ரவேலின் சிங்காசனத்தை மீண்டும் ஸ்தாபிக்கிறார்*

Jesus rebuilds the kingdom for Israel and

- *புற ஜாதிகள் அவருடைய சிங்காசனத்தின் முன் வருகிறார்கள்*

  Gentile nations come to His throne.

*இந்த தொடரின் ஒரு பகுதியில் இஸ்ரவேலின் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர் காலத்தை குறித்து திட்டமாய் பார்ப்போம். ஆனால் இப்போது அதற்கு ஒரு முன்னோட்டமாக ரோமர் புத்தகத்தை வாசிப்பீர்களா?*

- *ரோமர் 9 – இஸ்ரவேலின் கடந்தகாலம்*
- *ரோமர் 10 – இஸ்ரவேலின் நிகழ்காலம்*
- *ரோமர் 11 – இஸ்ரவேலின் எதிர்காலம்*

*இவற்றை படிக்கும்போது தேவனுடைய காலத்தின் திட்டங்களை குறித்து தெளிவான புரிதல் உண்டாகும்.*

*சபையின் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் எபேசியர் 5-ஆம் அதிகாரத்தில் உள்ளது.*

**கடந்தகாலம்**:

***எபேசியர் 5:25,*** *புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே* **கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து**,

*சபையில் அன்பு கூர்ந்து – கவனியுங்கள் கடந்தகாலத்தில் எழுதப்பட்டுள்ளது.*

***நிகழ்காலம்:***

***எபேசியர் 5:26,*** *தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,*

*இயேசு கிறிஸ்து தொடர்ந்து தமது சபைய பரிசுத்தப்படுத்திக் கொண்டேயிருப்பார். – நிகழ்காலம்*

*எதிர்காலம்:*

***எபேசியர் 5:27,***

> *கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.*

So, Jesus will present the church to Himself without spot or wrinkles- Future.

## *3. இஸ்ரவேலும் எருசலேமும்:* **Israel and Jerusalem:**

***லூக்கா 21:24,*** *பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.*

*கடைசி காலத்தை குறித்து உபதேசம் செய்பவர்கள் கிட்டத்தட்ட யாவரும் ஒத்துக்கொள்ளும் ஒரு காரியம், இஸ்ரவேல் தேசம் மீண்டும் சீரமைக்கப்படுதல். 1948-ம் ஆண்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்னர் இந்த கடிகாரம் மீண்டும் சுழல ஆரம்பித்துள்ளது. 1967ல் இஸ்ரவேலிற்கு தேவன் கொடுத்த நிலப்பரப்பை யூதர்கள் மீட்டெடுத்தனர்.*

*எசேக்கியேல் 38 மற்றும் 39 அதிகாரங்களை வாசிக்கும்போது இஸ்ரவேல் தேசம் கடைசி காலங்களில் எப்படி முக்கியமான ஒரு பங்கு வகிக்கும் என்பதை நாம் காணலாம்.*

***சகரியா 2:8,*** *பிற்பாடு மகிமையுண்டாகுமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; உங்களைக் கொள்ளையிட்ட ஜாதிகளிடத்துக்கு என்னை அனுப்பினார்; உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்.*

இஸ்ரவேல் தேவனின் கண்ணின் கருவிழி.

கர்த்தர் எருசலேமிலிருந்து ஆட்சி செய்வார். அவருடைய ராஜ்ஜியத்தில் உலகத்தின் காரியங்களும் பிணைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். ஆகவே இந்த காரியங்கள் அவர் உலகத்திற்கு திரும்புவதை அவசியப்படுத்துகின்றன.

***ஏசாயா 2:1-4,*** 1. ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்ட தரிசனம். *2.* கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். *3.* திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். *4.* அவர் ஜாதிகளுக்குள் நியாயம் தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்;

*ஜாதிக்குவிரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.*

*இந்த ராஜ்யம் அமைய உலகத்தில் ஒரு நிலப்பரப்பு அல்லது இடம் தேவை. இது அவருடைய முதலாம் வருகைக்கு அல்ல ஏனெனில், இந்த வசனம் பிற்காலத்தில் என்று தெளிவாக கூறுகிறது.*

***சகரியா 14:9,** அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.*

*இந்த வசனத்தை வாசித்தபிறகும் எப்படி உலகத்தில் தேவனுடைய ஆயிர வருட அரசாட்சி இல்லை என்று கூற முடியும்?*

***எரேமியா 31:10,** ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்.*

*தேவன் இஸ்ரவேலை கூட்டி சேர்ப்பார்.*

***எசேக்கியல் 36:19-24,** 19. அவர்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்தேன்; தேசங்களில் தூற்றிப்போடப்பட்டார்கள்; அவர்களுடைய*

நடக்கையின்படியேயும் அவர்களுடைய கிரியைகளின்படியேயும் அவர்களை நியாயந்தீர்த்தேன். 20. அவர்கள் புறஜாதிகளிடத்தில் போனபோது அந்த ஜனங்கள் இவர்களைக்குறித்து: இவர்கள் கர்த்தருடைய ஜனங்கள், அவருடைய தேசத்திலிருந்து வந்தார்கள் என்று சொன்னதினால், இவர்கள் என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினார்கள். 21. ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் தாங்கள் வந்துசேர்ந்த புறஜாதிகளிடத்திலே பரிசுத்தக்குலைச்சலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமாகவே இரங்குகிறேன். 22. ஆதலால், நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள்நிமித்தமல்ல நீங்கள் வந்து சேர்ந்த புறஜாதிகளிடத்தில் பரிசுத்தக்குலைச்சலாக்கின என் பரிசுத்த நாமத்தினிமித்தமே நான் இப்படிச் செய்கிறேன். 23. புறஜாதிகளின் நடுவே நீங்கள் பரிசுத்தக்குலைச்சலாக்கினதும் அவர்களுக்குள் உங்களால் பரிசுத்தக்குலைச்சலாக்கப்பட்டதுமான என் மகத்தான நாமத்தை நான் பரிசுத்தம்பண்ணுவேன்; அப்பொழுது புறஜாதிகள் தங்கள் கண்களுக்கு முன்பாக நான் உங்களுக்குள் பரிசுத்தம்பண்ணப்படுகையில், நான் கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். 24. நான் உங்களைப்

*புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டுவருவேன்.*

- *தேவனுடைய திட்டத்தின்படி அவர்கள் சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள்*
  God's plan they have been scattered.
- *அவர்கள் அவருடைய ஜனங்கள்*
  They are His people.
- *அவர்கள் இஸ்ரவேலின் குடியிருப்பு*
  They are the house of Israel.
- *அவருடைய நாமத்தினிமித்தம்*
  For the sake of His name.
- *தேசங்கள் அவரே தேவனென்று அறியும்*
  Nations will come to know He is God.
- *கர்த்தர் அவர்களை சகல தேசங்களிலிருந்தும் கூட்டி சேர்ப்பார்*
  God will gather them from all nations.

***ரோமர் 11:25,*** *மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரிலொரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்*

*For I do not desire, brethren, that you should be ignorant of this mystery, lest you should be wise in your own opinion, that blindness in part has happened to Israel until the fullness of the Gentiles has come in*.

புற ஜாதியார் சேர்ந்து காலம் பூரனப்படும்வரை இஸ்ரவேல் தேசத்தின் கண்கள் அவருடைய திட்டத்தின்படி மறைக்கப்பட்டிருப்பது புதிய ஏற்பாட்டில் நமக்கு தெளிவாக கூறப்பட்டுள்ளது.

***சகரியா 2:10-13,*** *10. சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு; இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று **கர்த்தர்** சொல்லுகிறார்.*
*11. அந்நாளிலே அநேகம் ஜாதிகள் **கர்த்தரைச்** சேர்ந்து என் ஜனமாவார்கள்; நான் உன் நடுவில் வாசமாயிருப்பேன்; அப்பொழுது சேனைகளின் **கர்த்தர்** என்னை உன்னிடத்தில் அனுப்பினாரென்று அறிவாய். 12. **கர்த்தர்** பரிசுத்த தேசத்திலே யூதாவாகிய தமது பங்கைச் சுதந்தரித்து, திரும்பவும் எருசலேமைத் தெரிந்துகொள்வார். 13. மாம்சமான சகலமான பேர்களே, **கர்த்தருக்கு** முன்பாக மௌனமாயிருங்கள்; அவர் தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து எழுந்தருளினார் என்று சொல் என்றார்.*

தேவனிடமிருந்து மகத்தான ஒரு வாக்குத்தத்தம்

Glorious promise from the Lord

- *இயேசு மீண்டும் எருசலேமிற்கு வருவார்*
  Jesus will come again to Jerusalem
- *அதை அவர் தன்னுடைய பங்காக தெரிந்துகொண்டார்*
  He had chosen that as His possession
- *அவரை விசுவாசிக்கிற அனேக தேசங்கள் அவரோடு இணையும்*
  Many nations will have joined with Him who believe
- *அவர்களோடு அவர் வாசம் செய்வார்!*
  He will dwell with them!

*அற்புதம்!!*

*ஆமோஸ் **9:14-15**, என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். 15. அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய **கர்த்தர்** சொல்லுகிறார் என்றார்.*

*கர்த்தர் அவர்களை அங்கு திரும்பச்செய்து அவர்களை ஸ்திரப்படுத்துவார். வேறு யாரும் அவர்களை அற்றுப்போகப் பண்ணுவதில்லை!*

*இறுதியாக, இஸ்ரவேல் தேசத்தின்மேல் தேவனுடைய மகத்தான வாக்குத்தத்தம்.*

***எசேக்கியல்** 37:13-14, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது, நான் **கர்த்தர்** என்று அறிந்துகொள்வீர்கள். 14. என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் **கர்த்தர்** என்று அறிந்துகொள்வீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று **கர்த்தர்** உரைக்கிறார் என்று சொல் என்றார்.*

*கர்த்தர் தமது ஜனங்களை கல்லறைகளிலிருந்து கொண்டுவருவார்!*

*தம்முடைய ஆவியை அவர்கள் மேல் ஊற்றி அவர்களுக்கு ஜீவன் கொடுப்பார்!!*

*அவர்களை தங்கள் தேசத்தில் வைப்பார்!!!*

# 4. தேசங்களை நியாயந்தீர்ப்பதற்கு
# To Judge the Nations

***மனுஷர் யாவருக்கும் நியாயாதிபதியாக இயேசு ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்:***

**Jesus is appointed Judge of all mankind:**

***யோவான் 5:20-30*** *(please take time to read)வ22, அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.*

***மத்தேயு 25:31-33,*** *அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். 32. அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாக பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து, 33. செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்.*

*மனுஷகுமாரன் சகல தேசங்களையும் நியாயம் விசாரிக்கும் நியாயாதிபதியாவார்.*

*கடைசி காலத்தை குறித்து கர்த்தர் பேசின யோவேலின் தீர்க்கதரிசன புத்தகத்தில் பார்க்கலாம்.*

**யோவேல்** *3:1-3, இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும், 2. நான் சகல ஜாதியாரையும் கூட்டி யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரவேலென்னும் என் சுதந்தரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக்கொண்டதினிமித்தமும், 3. அவர்கள் என் ஜனத்தின்பேரில் சீட்டுப்போட்டு, ஆண்குழந்தைகளை வேசிப்பணையமாகக் கொடுத்து, மதுபானம் பண்ணும்படி, பெண்குழந்தைகளைத் திராட்சரசத்துக்குக் கிரயமாகக் கொடுத்ததினிமித்தமும், அங்கே அவர்களோடு வழக்காடுவேன்.*

*இஸ்ரவேலை தேவன் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்போது, யோசபாத் பள்ளத்தாக்கில் அவர் நியாயந்தீர்ப்பார்.*

*இங்கு ஆர்மேகதான் யுத்தம் நடைபெறும். யோவேல் 3:7-17 படிக்க. இங்கு வ11 – வ16-ஐ பாப்போம்.*

*சகல ஜாதிகளே, நீங்கள் சுற்றிலுமிருந்து ஏகமாய் வந்து கூடுங்கள்; **கர்த்தாவே**, நீரும் அங்கே உம்முடைய பராக்கிமசாலிகளை இறங்கப்பண்ணுவீராக. 12. ஜாதிகள் எழும்பி யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு வருவார்களாக; சுற்றிலுமுள்ள ஜாதிகளை நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்பேன். 13. பயிர் முதிர்ந்தது, அரிவாளை நீட்டி அறுங்கள், வந்து இறங்குங்கள்; ஆலை நிரம்பியிருக்கிறது, ஆலையின் தொட்டிகள் வழிந்தோடுகிறது; அவர்களுடைய பாதகம் பெரியது. 14. நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்கள் திரள்திரளாய் இருக்கிறார்கள்; நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே **கர்த்தரின்** நாள் சமீபமாயிருக்கிறது. 15. சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும், நட்சத்திரங்கள் ஒளிமழுங்கும். 16. **கர்த்தர்** சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; வானமும் பூமியும் அதிரும்; ஆனாலும் **கர்த்தர்** தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்.*

- *சகல தேசங்களும் கூடிவரும்*

  All nations will assemble and gather

- *யோசபாத் பள்ளத்தாக்கிற்கு வருவார்கள்*
  Come to valley of Jehoshaphat
- *இஸ்ரவேல் தேசத்தோடு சண்டையிடுவதை விட்டுவிட்டு முடிவெடுக்கும் பள்ளத்தாக்கிற்கு வருவார்கள் (*valley of decision)

  Instead of all nations fighting with the nation of Israel they will come to the valley of decision
- *அந்த நாள் அவர் வருகையின் நாளாக இருக்கும்*
  That Day will be of His coming day
- *சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும்*
  Sun and moon will be darkened
- *கர்த்தர் சீயோனிலிருந்து முழங்குவார்*
  Lord will roar from Zion
- *எருசலேமிலிருந்து அவர் சத்தம் தொனிக்கும்*
  His voice will come from Jerusalem
- *வானமும் பூமியும் அவர் சத்தத்தில் அதிரும்*
  Heavens and earth will shake at His voice

*இதை **மத்தேயு 25:31-32** உடன் ஒப்பிட்டு பாருங்கள்,*

*அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல்*

வீற்றிருப்பார். 32. அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாக பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து,

தேசங்கள் யாவும் நியாயந்தீர்க்கப்படும்

மேசியாவிற்கு செவிகொடுக்கும் தேசங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்.

மேசியாவிற்கு செவிகொடுக்காத தேசங்கள் யாவும் நித்தியா ஆக்கினைக்கு அனுப்பப்படும்.

இதுவே தேசங்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பை குறித்த வாக்குத்தத்தம். ஆனால் தம்முடைய ஜனத்திற்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் தேவன் அடைக்கலமாக இருப்பார்.

வெளிபடுத்தல் 14:14-15 & 20-ல் இது நிறைவேறுவதை நாம் பார்க்க முடியும்.

**வெளி 14:14-15 & 20,** பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே

*கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன். 15. அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச்சொன்னான்.*

*20. நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது; அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் பெருகிவந்தது.*

***வெளி 11:15,*** *ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய* ***கர்த்தருக்கும்****, அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.*

*ஆமென்!!*

*அப்போஸ்தலனாகிய பவுலைக்கொண்டு தெசலோனிக்கேய சபைக்கு ஆண்டவர் இதே காரியத்தை தான் கூறினார்.*

*2* **தெசலோனிக்கேயர்** *1:7-9,* தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, *8.* **கர்த்தராகிய** இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். *9.* அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது,

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அவரை விசுவாசிப்போருக்கு விடுதலையாகவும் அவரை விசுவாசிக்காதவர்களுக்கோ தேவன் பழி தீர்க்கும் காலமாகவும் அமையும்.

## *யார் நியாயந்தீர்க்கப்படுவார்கள்?*

**Who Will Be Judged?**

*கீழ்க்கண்ட ஜனங்கள் கிறிஸ்துவின் வருகையில் நியாயந்தீர்க்கப்படுவர்:*

1. *இஸ்ரவேல் தேசத்தில் வாழ்பவர்கள்*
   Those living from the nation Israel (*எசேக்கியேல்* 20:34-38 & *மத்தேயு* 25)
2. *புற ஜாதியான தேசங்கள்*
   The Gentile Nations (*ஏசாயா* 40:15& 17 & *மத்தேயு* 25:31-32)
3. *பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்*
   The Old Testament Saints (*தானியேல்* 12:2 & *மத்தேயு* 16:7)
4. *உபத்திரவ கால பரிசுத்தவான்கள்*
   The Tribulation Saints (*வெளி* 20:4-6)

*எனவே, நியாயத்தீர்ப்பு கொடுக்க இயேசு மீண்டும் வரவேண்டியதாயிருக்கிறது.*

*சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின், இஸ்ரவேலோடும் ஏழு வருட உபத்திரவத்தில் மீட்கப்பட்டவர்களையும் தேவன் இடைபடுவார் (deals).*

*இஸ்ரவேலுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம்.*

*சபை பெந்தேகொஸ்தே நாளில் உருவாக்கப்பட்டு ரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுகையில் முடிகிறது.*

*ரகசிய வருகையில் சபை எடுத்துக்கொள்ளப்பட்டவுடன் இஸ்ரவேலின் கண்கள் திறக்கப்படும். சகரியா தீர்க்கதரிசி உரைத்ததுபோல் அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கி பார்ப்பார்கள்.*

*ஆனாலும் எல்லோரும் அவரை நோக்கி பார்க்க மாட்டார்கள்.*

*இயேசு மீண்டும் திரும்ப வேண்டும், அதுவே தேவனுடைய சித்தமாய் இருக்கிறது.*

*பின்னர் ஏழு வருட உபத்திரவ காலம்.*

***எசேக்கியேல்** 20: 33-38, பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலும், உங்களை ஆளுவேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று **கர்த்தராகிய** ஆண்டவர் உரைக்கிறார். 34. நீங்கள் ஜனங்களுக்குள் இராதபடிக்கு நான் உங்களைப் புறப்படப்பண்ணி, நீங்கள் சிதறியிருக்கிற தேசங்களில் இராதபடிக்கு நான் உங்களைப் பலத்தகையினாலும், ஓங்கிய புயத்தினாலும், ஊற்றப்பட்ட உக்கிரத்திலும் கூடிவரச்செய்து, 35. உங்களை ஜனசதளங்களின் வனாந்தரத்திலே*

*கொண்டுபோய், அங்கே உங்களோடே முகமுகமாய் வழக்காடுவேன். 36. நான் எகிப்துதேசத்தின் வனாந்தரத்தில் உங்கள் பிதாக்களோடு வழக்காடினதுபோல உங்களோடும் வழக்காடுவேன் என்று* ***கர்த்தராகிய*** *ஆண்டவர் சொல்லுகிறார். 37. நான் உங்களைக் கோலின்கீழ் செல்லும்படி செய்து, உங்களை உடன்படிக்கையின் கட்டுக்குட்படுத்தி, 38. கலகக்காரரையும் துரோகிகளையும் உங்களைவிட்டுப் பிரித்துப்போடுவேன்; அவர்களைத் தாங்கள் தங்கும் தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுவேன்; ஆனாலும் அவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் பிரவேசிப்பதில்லை; அப்பொழுது நான்* ***கர்த்தர்*** *என்று அறிந்துகொள்வீர்கள்.*

*33 "As I live," says the Lord God, "surely with a mighty
hand, with an outstretched arm, and with fury poured
out, I will rule over you. 34 I will bring you out from the
peoples and gather you out of the countries where you
are scattered, with a mighty hand, with an outstretched
arm, and with fury poured out. 35 And I will bring you into
the wilderness of the peoples, and there I will plead My
case with you face to face. 36 Just as I pleaded My case
with your fathers in the wilderness of the land of Egypt,
so I will plead My case with you," says the Lord God. 37 "I
will make you pass under the rod, and I will bring you into
the bond of the covenant; 38 I will purge the rebels from*

*among you, and those who transgress against Me; I will bring them out of the country where they dwell, but they shall not enter the land of Israel. Then you will know that I am the Lord.*

தேவன் உபத்திரவ காலத்தில் யாவரையும் கூட்டி சேர்ப்பார். பின்னர் "இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்" என்று எழுதியிருக்கிறபடியே இஸ்ரவேலர் யாவரும் மீட்கப்படுவார்கள். உபத்திரவம் யாவும் நின்று விடும் என்று இதன் அர்த்தம். அது மாத்திரமல்ல, இஸ்ரவேல் ஒரு தேசமாக மீட்கப்பட்டாலும் அதிலும் சிலர் மறுதலித்து ஆக்கினைக்குட்படுவார்கள்.

ஆகவே இயேசு மீண்டும் வருவது அத்தியாவசியமாகும்.

இயேசு மீண்டும் வரும்போது சபையின் நாட்கள் முடிந்துபோகும்.

இயேசு மீண்டும் வரும்போது, தேசங்களுக்கு நியாயத்தீர்ப்பின் காலம்.

இயேசு மீண்டும் வரும்போது, இஸ்ரவேலின் ராஜ்யத்தை காட்டப்படும்.

இயேசு மீண்டும் வரும்போது, புறஜாதியாரின் நாட்கள் பரிபூரனப்படும். அவர் இஸ்ரவேலுக்காக வந்து அதை விடுவிப்பார்.

தேவ சித்தம்.

உச்சக்கட்டமமும் சபை பரிபூரனப்படுதலும் அவருடைய வருகையை சார்ந்திருக்கிறது.

உச்சக்கட்டமமும் தேசங்கள் பரிபூரனப்படுதலும் அவருடைய வருகையை சார்ந்திருக்கிறது.

உச்சக்கட்டமமும் இஸ்ரவேல் பரிபூரனப்படுதலும் அவருடைய வருகையை சார்ந்திருக்கிறது.

ஆகவே இயேசு வருகிறார்.

தேவ ஜனம் அவரை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

தேவ சித்தம் எதிர்நோக்கியிருக்கிறது.

நான் ஆயத்தமாக இருக்கிறேன், நீங்களும் ஆயத்தமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.